# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2340/42 - 2023 ජූලි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.07.13

*2340/42 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழமைந்த அறிவித்தல்***

மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 2334/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 2147/72 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினை, இக்கட்டளை மூலம் பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.*

1. *2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 2334/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான நிதி* (மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி) ஒழுங்குவிதிகளில், 5 ஆம் பந்தியின் (ஆ) உப பந்திக்குப் பதில் பின்வரும் பந்தியைப் பிரதியீடு செய்தல் :-

   "(ஆ) *1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய ஏதேனும் வாகனங்கள்* நீங்கலாக கிரய, காப்புறுதி, சரக்கேற்றல் (CIF) பெறுமதி அல்லது தொழிற்சாலை விலை (உற்பத்தியாளர் விலை) ஆனது, *2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய 2312/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்* I ஆம் அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சொகுசு வரியற்ற வரம்பினை மீறும் ஒவ்வொரு மோட்டார் வாகனங்களுக்கும், கூறப்பட்ட அட்டவணையின் III ஆம் நிரலில் நேரெதிர் பதிவில் குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில்.

   இருப்பினும், *2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் இராஜதந்திரி ஒருவர் அல்லது இராஜதந்திர அமைப்பு ஒன்றினால் 100 சதவீத தீர்வை/வரி அற்ற அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டு அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டு, அத்தகைய இராஜதந்திரி ஒருவர் அல்லது இராஜதந்திர அமைப்பின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் விற்பனையின் அல்லது அப்புறப்படுத்தலின் போது* செலுத்தத்தக்க சொகுசு வரி, இதனகத்தே III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய வாகனத்தின் பாவனைக் காலத்தின் அடிப்படையில் அறவிடப்படுதல் வேண்டும்" ;


1A - PG 6387 — 456 (2023/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மற்றும்

2. 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிய 2318/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான அட்டவணையில், அதனகத்தே II ஆம் அட்டவணைக்கு உடனடுத்து வருமாறு இதனகத்தேயுள்ள அட்டவணையை III ஆம் அட்டவணையாகச் சேர்த்தல்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, யூலை 13.

அட்டவணை

| அட்டவணை III | |
|---|---|
| **முதல் பதிவுத் திகதியிலிருந்து இராஜதந்திரி ஒருவரால் அல்லது இராஜதந்திர அமைப்பு ஒன்றினால் பயன்படுத்தப்படும் காலம் *** | **சொகுசு வரி விகிதம்** |
| 01 வருடத்திற்குக் குறைவான | செலுத்தத்தக்க சொகுசு வரியில் 85% |
| 01 வருடத்திற்கு மேல் மற்றும் 02 வருடங்களுக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான | செலுத்தத்தக்க சொகுசு வரியில் 75% |
| 02 வருடங்களுக்கு மேல் மற்றும் 03 வருடங்களுக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான | செலுத்தத்தக்க சொகுசு வரியில் 65% |
| 03 வருடங்களுக்கு மேல் மற்றும் 04 வருடங்களுக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான | செலுத்தத்தக்க சொகுசு வரியில் 55% |
| 04 வருடங்களுக்கு மேல் மற்றும் 05 வருடங்களுக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான | செலுத்தத்தக்க சொகுசு வரியில் 45% |
| 05 வருடங்களுக்கு மேல் மற்றும் 06 வருடங்களுக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான | செலுத்தத்தக்க சொகுசு வரியில் 35% |
| 06 வருடங்களுக்கு மேல் மற்றும் 07 வருடங்களுக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான | செலுத்தத்தக்க சொகுசு வரியில் 25% |
| 07 வருடங்களுக்கு மேல் மற்றும் 08 வருடங்களுக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான | செலுத்தத்தக்க சொகுசு வரியில் 15% |
| 08 வருடங்களுக்கு மேற்பட்ட | செலுத்தத்தக்க சொகுசு வரியில் 10% |

*முதல் பதிவுத் திகதிக்கும் வாகனம் விற்பனை செய்யப்பட்ட அல்லது அப்புறப்படுத்தப்பட்ட திகதிக்கும் இடைப்பட்ட காலம் அந்த வாகனத்தின் பயன்பாட்டுக் காலத்தைக் கணிப்பிடுவதற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

EOG 07-0125

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.